புழல் ஏரியிலிருந்து 500 கனஅடி நீர் திறப்பு: 11 கிராமங்களுக்கு சிவப்பு அபாய எச்சரிக்கை

கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் அறிவிப்பு

திருவள்ளூர், நவ. 12–

புழல் ஏரியிலிருந்து 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 11 கிராமங்களுக்கு வெள்ள அபாய சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது என்று கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் கூறியுள்ளார்.

வடகிழக்கு பருவமழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்துக்குட்பட்ட புழல் ஏரியில் நீர்மட்டம் வேகமாக உயர்வதைத் தொடர்ந்து, நேற்று முதல் கூடுதலாக வினாடிக்கு 500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வி.இராஜாராமன் மற்றும் கலெக்டர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

அப்போது கலெக்டர் கூறியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்த வரை வானிலை ஆய்வு மையம் ரெட் அலார்ட் விடுக்கப்பட்டுள்ளது. சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குவன 5 நீர்ஆதாரங்களாகும். அவற்றில் 4 நீர் ஆதாரங்கள் நம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளன. பூண்டி, புழல், சோழவரம், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஆகிய நீர் ஆதாரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

11 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

பூண்டியை பொறுத்தவரை இதன் முழு கொள்ளளவு 3.3 டி.எம்.சி. ஆகும். அதில் தற்பொழுது 1 டிஎம்சி மட்டுமே நீர் அளவு உள்ளது. இதுமுழு கொள்ளளவில் 33 சதவிகிதம் கொள்ளளவு மட்டுமே தண்ணீர் அளவு எட்டியுள்ளது. இந்த ஏரி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. புழலை பொறுத்தவரை இதன் முழு கொள்ளளவு 3.3 டிஎம்சி ஆகும். அதில் தற்பொழுது 2.7 டிஎம்சி கொள்ளளவு நீர் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. ஏற்கனவே நவம்பர் 2ம் தேதி அன்றிலிருந்து வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகளாக 100 கன அடி கூடுதலாக நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது அந்த 100 கன அடியிலிருந்து 500 கன அடியாக உயர்த்தி, நீர்வெளியேற்றப்பட்டு வருகிறது.

புழல் ஏரியில் உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதால், உபரிநீர் செல்லும் கால்வாயின் அருகில் உள்ள தண்டல், நாரவாரிக்குப்பம், கழனி, கிராண்ட்லைன், வடகரை, புழல், வடபெரும்புக்கம், மாத்தூர், வாசப்பூர், மணலி, சடையங்குப்பம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் வசிக்கும் 11 கிராமங்களுக்கு வெள்ள அபாயத்துக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அந்த பகுதிகளுக்கு அதிகாரிகள் நேரடியாக சென்று மக்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ரெட் அலார்ட் விடுக்கப்பட்டதன் காரணமாக வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகளுக்காக அமைக்கப்பட்ட 42 குழுக்களுமே துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பேரிடர் காலங்களில் முடிவுகளை உடனுக்குடன் எடுப்பதற்காக துணை ஆட்சியர் நிலையில் அதிகாரிகளின் தலைமையில் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. 4 மூத்த இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள அதிகாரிகளான ராஜாராமன், சுந்தரவல்லி, சண்முக சுந்தரம், கந்தசாமி ஆகியோர் நியமிக்கப்பட்டு, அவர்களும் திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து, அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொது மக்கள் பெருமழை தொடர்பாக தங்கள் புகார்களை தெரிவிக்க மாவட்ட பேரிடர் தடுப்பு கட்டுப்பாட்டு அறைக்கான கட்டணமில்லா தொலைபேசி எண்.1077 இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கி வருகின்றது. மேலும், கட்டுப்பாட்டு அறை 04427664177, 04427666746 க்கும், வாட்ஸ் ஆப் எண். 9444317862 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம், அதேபோன்று, ஒவ்வொரு கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், ஒவ்வொரு தாலுக்கா அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரை வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொண்டுள்ளோம். பொதுமக்கள் தேவையில்லாத வதந்திகளை நம்பி அச்சம் கொள்ளாமல் அரசால் அறிவிக்கப்படுகின்ற அறிவிப்புகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வுகளில், உதவி ஆட்சியர் (பயிற்சி) கேத்ரின் சரண்யா, கொசஸ்தலையாறு வடிநில கோட்டம் செயற்பொறியாளர் சி.பொதுப்பணித்திலகம், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மழை வெள்ளத் தண்ணீரில் தத்தளிக்கும்

மக்களின் கண்ணீரைத் துடைப்போம்; கடமை ஆற்றுவோம்: அண்ணா தி.மு.க.வினருக்கு எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள்

சென்னை, நவ.12–

'தண்ணீரில் தத்தளிக்கும் மக்களது கண்ணீரைத் துடைப்போம்; கடமைகளை ஆற்றுவோம்'' என்று அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. இடைக்காலப் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை குறித்த காலத்தில் தொடங்கியது. இந்திய வானிலை ஆய்வு மையம் ஏற்கெனவே அறிவித்தவாறு கடந்த 10.11.2022 முதல் தமிழகமெங்கும் 36 மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. மேலும், இந்த கனமழை 16.11.2022 வரை நீடிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் கன மழையின் காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம் போல் சூழ்ந்துள்ளதால், அங்கு வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு, அவர்களது அன்றாட வாழ்விற்கு தேவைப்படும் பால், குடிநீர் மற்றும் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய, அவசர உதவிகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண பணிகளை இந்த திமுக அரசு போதிய அளவு செய்யவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் வேதனையுடன் தெரிவித்து வருகிறார்கள்.

வடகிழக்கு பருவமழை எந்த தேதியில், எந்த நேரத்தில் தொடங்கும் என்று மத்திய வானிலை ஆராய்ச்சி மையம் பல தினங்களுக்கு முன்பாக அறிவித்திருந்த போதிலும், அதை கவனத்தில் கொள்ளாத திமுக அரசு, எந்தவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்காமல், காலம் தாழ்த்தி வந்ததன் விளைவாக, இன்று பல்வேறு மாவட்டங்களில், பல பகுதிகளில் மழை நீர் சூழ்ந்து, வெள்ளம் வடியாமல் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

மக்களுடைய பார்வைக்கு விட்டு விடுகிறேன்

குறிப்பாக, சென்னை மாநகரை பொறுத்தவரையில் மழை நீர் வடிகால் பணிகள் எந்த அளவிற்கு நடந்து முடிந்திருக்கிறது என்பதை அறுதியிட்டு கூற முடியாத ஆட்சியாளர்கள் தற்போது ஆட்சியில் இருக்கிறார்கள். குறிப்பாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் 90 விழுக்காடு பணிகள் நிறைவடைந்தது என்றும், சுகாதாரத் துறை அமைச்சர் 70 விழுக்காடு பணிகள் நிறைவடைந்திருக்கிறது என்றும், சென்னை மாநகர மேயர் 75 விழுக்காடு பணிகள் நிறைவடைந்திருக்கிறது என்றும், தமிழகத்தின் முதலமைச்சர் 70 முதல் 80 விழுக்காடு பணிகள் நிறைவடைந்திருக்கிறது என்றும் ஒருவருக்கொருவர் கூறுவதில் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

ஆட்சி அதிகாரத்தில், நிர்வாகத்தில் எந்தவிதமான கருத்து பரிமாற்றங்களோ, தகவல் பரிமாற்றங்களோ இல்லை என்பதன் வெளிப்பாடுதான் இப்படி முரண்பட்ட கருத்துக்களை ஆட்சியாளர்கள் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் இருக்கும் போது இவர்களுடைய மக்கள் நலப்பணி எந்த அளவிற்கு இருக்கும் என்பதை மக்களுடைய பார்வைக்கே விட்டு விடுகிறேன்.

இது போன்ற பேரிடர் காலங்களில் களமாடக்கூடிய முதலமைச்சர் இல்லை என்கின்ற மக்களின் எண்ண வெளிப்பாடு பெரும்பகுதியாக வெளிப்படுகிறது. காரணம் கடந்த ஒக்கி புயலின் போதும், கஜா புயலின் போதும், சுனாமியின் பெரும் தாக்கத்தின் போதும், 2020–ம் ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய மழை வெள்ளத்தின் போதும் மக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்டறிந்து களத்தில் இறங்கி களமாடிய இயக்கம் அண்ணா தி.மு.க.

மாறாக, கடந்த சில தினங்களாக ஆட்சியாளர்கள் ஒருசில இடங்களை மட்டும் மேம்போக்காக பார்வையிட்டுவிட்டு மற்ற பகுதிகளில் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்கவில்லை. எனவே இந்த அரசு மழை நீரை வடியாத அரசாக மாற்றியிருக்கிறது. மாரி என்று சொல்லக்கூடிய மழையின் வெள்ளச் சேதத்தின் உண்மையான நிலையை சொல்லாமல் மாறி, மாறி பேசக்கூடிய தலைவர்கள் தான் தற்போது திமுகவில் இருக்கிறார்கள். இனியும் இந்த அரசை நம்பினால் மக்கள் மிகப்பெரிய அவல நிலைக்கு ஆளாவார்கள். அவர்களுடைய வாழ்க்கை மோசமான நிலைக்கு தள்ளப்படும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மாவின் வழிவந்த நமது கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அவர்களுடைய பகுதிகளில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக குடிநீர், பால் மற்றும் உணவுப் பொருட்களை தேவைப்படும் மக்களுக்கு வழங்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கு உழைப்பதில் அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகளே முன்கள வீரர்கள்; தன்னலம் கருதாத தியாகச் செம்மல்கள் என்ற வீர வரலாறு நம் பொதுவாழ்வுக்கு உண்டு. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

"பாடுபட்டு சேர்த்த பொருளை கொடுக்கும்போதும் இன்பம்
வாடும் ஏழை மலர்ந்த முகத்தைப் பார்க்கும்போதும் இன்பம்" என்ற புரட்சித் தலைவரின் பாடல் நம் பணிகளுக்கு உந்து சக்தியாக இருக்கட்டும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

செம்மண் வழக்கிலிருந்து அமைச்சர் பொன்முடியை விடுவிக்க சென்னை ஐகோர்ட் மறுப்பு

சென்னை,நவ 12–

செம்மண் வழக்கில் இருந்து அமைச்சர் பொன்முடியை விடுவிக்க சென்னை ஐகோர்ட் மறுப்பு தெரிவித்துள்ளது. 2006–11ம் ஆண்டுகளில் அமைச்சராக பொன்முடி இருந்தபோது, அவரது மகன் கவுதம சிகாமணி, உறவினர் ஜெயச்சந்திரன் உள்ளிட்டோர் குவாரிகளில் அளவுக்கு அதிகமாக செம்மண் எடுத்து இழப்பு ஏற்படுத்தியதாக அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனால் அரசிற்கு ரூ.28 கோடி இழப்பு ஏற்பட்டது என விழுப்புரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கை ரத்து செய்ய கோரி அமைச்சர் பொன்முடி சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஏற்கனவே தாக்கல் செய்த ஆவணங்கள் வாக்குமூலங்களில் அமைச்சருக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்த ஆதாரங்கள் உள்ளது என்று தெரிவித்து ஐகோர்ட், அமைச்சர் பொன்முடியை வழக்கில் இருந்து விடுவிக்க மறுப்பு தெரிவித்து மனுவை தள்ளுபடி செய்தது.

4 மாதங்களில் 375 கிலோ கஞ்சா பறிமுதல்: தாம்பரம் மதுவிலக்கு போலீசார் நடவடிக்கை

சென்னை, நவ. 12–

சென்னை, தாம்பரம் மாநகர காவல் ஆணையரக மதுவிலக்கு அமல்பிரிவு போலீசார் எடுத்த அதிரடி நடவடிக்கையில் கடந்த 4 மாதங்களில் 375 கிலோ கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தாம்பரம் மாநகர காவல் எல்லைக்குட்பட்ட இடங்களில் கஞ்சா விற்பனையை அறவே ஒழிக்கும் பொருட்டு தாம்பரம் போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உத்தரவின் பேரில் தாம்பரம் மதுவிலக்கு உதவி ஆணையாளர் ரவிச்சந்திரன் தலைமையில், தாம்பரம், கூடுவாஞ்சேரி, பள்ளிக்கரணை மதுவிலக்கு ஆய்வாளர்கள் சாலினி, ரவிக்குமார், சரவணன் ஆகியோர் தலைமையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று பள்ளிக்கரணை மதுவிலக்கு ஆய்வாளர் சரவணன் தலைமையிலான தனிப்படையினர் கஞ்சா வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது சங்கர்நகர், பம்மல் பஜார் அருகில் சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த பெரம்பூரைச் சேர்ந்த பாபு (வயது 36) என்ற நபரை மடக்கிப்பிடித்து விசாரணை செய்தனர். அவரிடம் சோதனையிட்ட போது 1 கிலோ கஞ்சா மற்றும் ஒரு செல்போனை பறிமுதல் செய்தனர்.

மேலும் கூடுவாஞ்சேரி மதுவிலக்கு ஆய்வாளர் ரவிக்குமார் தலைமையிலான தனிப்படையினர் ரகசிய தகவலின் பேரில் பெரும்பாக்கம் எட்டு அடுக்கு பகுதியில் கண்காணித்தனர். அங்கு ஒரிசா மாநிலத்தை சேர்ந்த ஜிஜேந்திர ஜனா (27) என்பவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்து அவரது வீட்டில் போலீசார் சோதனை செய்த போது அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 100 கிராம் கஞ்சா மற்றும் 1 செல்போன் கைப்பற்றினர். பாபு மற்றும் ஜிதேந்திர ஜனா இருவரையும் போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலில் சிறையில் அடைத்தனர். போதை ஆசாமிகளை கண்டறிந்து கைது செய்த தாம்பரம் மற்றும் பள்ளிக்கரணை மதுவிலக்கு ஆய்வாளர்களை தாம்பரம் போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் வெகுவாக பாராட்டினார்.

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

செப்டம்பர் 30, 2022 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூ. இலட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30,2022 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு ஜீன் 30, 2022 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30,2021 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30,2022 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறு மாதங்கள் செப்டம்பர் 30,2021 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2022 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	27,839	24,497	22,386	52,336	40,700	90,098
2	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	4,293	3,434	3,193	7,727	5,911	11,356
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	4,293	3,434	3,193	7,727	5,911	11,356
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	3,191	2,560	2,366	5,751	4,401	8,431
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	3,191	2,560	2,366	5,751	4,401	8,505
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) அ) அடிப்படை	20.73	16.63	15.37	37.36	28.60	54.78
	ஆ) குறைமதிப்பு	20.73	16.63	15.37	37.36	28.60	54.78

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2022-ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக

சென்னை
11 நவம்பர், 2022

"Shaping the world we imagine"
Visit our website : http://www.esabindia.com

ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்

சிகாஜென் இந்தியா லிமிடெட் Sicagen

CIN: L74900TN2004PLC053467

பதிவு அலுவலகம் : 4வது மாடி, ஸ்பிக் ஹவுஸ்,
எண்.88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை – 600 032.
Website: www.sicagen.com / E-mail: companysecretary@sicagen.com Phone: 044 4075 4075

தபால் வாக்குப்பதிவு அறிவிப்பு மற்றும் பங்குதாரர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு தகவல்

நிறுவனங்கள் சட்டம், 2013 ('சட்டம்') பிரிவுகள் 108, 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் விதிகளுக்கு இணங்கவும் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015 ('பட்டியல் விதிமுறைகள்')ன் விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ('MCA சுற்றறிக்கைகள்') வெளியிட்ட 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட எண். 17/2020, 05/05/2022 தேதியிட்ட எண். 03/2022 மற்றும் அவ்வப்போது திருத்தப்படும் மற்ற பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள், (எந்தவொரு சட்டரீதியான திருத்தம்(கள்) அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ள அவற்றை மீண்டும் செயல்படுத்துதல் உட்பட) இணங்க பின்வரும் சிறப்பு வணிகங்களுக்காக தொலைதூர மின்வாக்களிப்பு செயல்முறை மூலம் தபால் வாக்கெடுப்பு வாயிலாக மட்டுமே ('தொலைதூர மின் வாக்களிப்பு') சிகாஜென் இந்தியா லிமிடெட் ('நிறுவனம்') உறுப்பினர்களின் ஒப்புதல் கோரப்படுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.	சிறப்பு வணிகம்
1	சட்டப் பிரிவு 152ன் கீழ் திரு. நந்தகுமார் வர்மா, [DIN: 09776904], அவர்களை நிறுவனத்தின் இயக்குநராக நியமனம் செய்தல்
2	திரு. நந்தகுமார் வர்மா, [DIN: 09776904], அவர்களை நிறுவனத்தின் முழு நேர இயக்குநராக நியமனம் செய்தல் மற்றும் ஊதியம் வழங்குவதற்கான ஒப்புதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வெள்ளிக்கிழமை, நவம்பர் 4, 2022 அன்று ('கட்ஆப் தேதி') வணிக நேரத்தின் முடிவில் நிறுவனத்தின் RTA/DPல் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்களுக்கு மற்றும் நிறுவனம்/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ளவர்களுக்கு தபால் வாக்கு அறிவிப்பு ('அறிவிப்பு') மற்றும் விளக்க அறிக்கையின் மின்னணு நகல்களும் வெள்ளிக்கிழமை, 11 நவம்பர் 2022 அன்று அனுப்பப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின்படி, உறுப்பினர்கள் தொலைதூர மின்வாக்களிப்பு செயல்முறை மூலம் மட்டுமே வாக்களிக்க முடியும். மேலும், மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, அறிவிப்பு நகல்கள், தபால் வாக்குப் படிவங்கள் மற்றும் முன்பணம் செலுத்திய வணிக பதில் உறைகள் ஆகியவற்றை அனுப்ப வேண்டியது கைவிடப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இணையதளம் (www.sicagen.com), பிஎஸ்இ லிமிடெட்(www.bseindia.com) மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்(CDSL)(www.evotingindia.com) லும் அறிவிப்பு கிடைக்கிறது.

இது தொடர்பாக அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படுவதாவது:

1. தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு வணிகங்கள் தொலைதூர மின் வாக்களிப்பு மூலம் பரிவர்த்தனை செய்யப்படும்.
2. தொலைதூர மின்வாக்களிப்பு புதன்கிழமை, 16 நவம்பர், 2022 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கும் மற்றும் வியாழக்கிழமை, 15 டிசம்பர் 2022 அன்று மாலை 5.00 மணி (இந்திய நேரப்படி) வரை வாக்களிக்கத் திறந்திருக்கும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு வாக்களிப்பதற்கு தொலைதூர மின்வாக்களிப்பு முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு உறுப்பினர் ஒருவரால் அளிக்கப்பட்டவுடன், அதை மாற்றுவதற்கு உறுப்பினர் அனுமதிக்கப்படமாட்டார்.
4. பதிவுத் தேதியில் (வெள்ளிக்கிழமை, நவம்பர் 4, 2022) காகித வடிவில் அல்லது டீமெட்டிரிலைஸ்ட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், சிடிஎஸ்எல் ('தொலைதூர மின்வாக்களிப்பு'). மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களின் ஒவ்வொரு அயிட்டங்களிலும் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.
5. பதிவு தேதியன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நபர் மட்டுமே, தொலைதூ மின்வாக்களிக்கும் வசதியைப் பெறுவதற்கு உரிமை யுடையவர் ஆவார்.
6. முழு மின்வாக்களிப்பு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்காக M/S. KRA அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், சென்னை அவர்களை ஆராய்வாளராக நிறுவனம் நியமித்துள்ளது.
7. மின்வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQகள்") பிரிவை பார்க்கலாம் மற்றும் உதவிப்பிரிவின் கீழ் உள்ள www.evotingindia.comல் கிடைக்கும் மின்வாக்களிப்பு கையேட்டை பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் எழுதலாம். அல்லது இலவச தொலைபேசி எண்: 1800 22 55 33 அல்லது திரு. ராகேஷ் தல்வி (022–23058542) அவர்களை அணுகலாம்.
8. மேற்கூறிய அறிவிப்பு தொடர்பாகவும், இதுவரை புதுப்பிக்காத உறுப்பினர்களின் மின்னஞ்சல் ஐடிகளைப் பதிவு செய்யவும் ஒரு அறிவிப்பை நிறுவனம், 8 நவம்பர், 2022 செவ்வாய்கிழமை அன்று பிசினஸ் ஸ்டாண்டர்ட் மற்றும் மக்கள் குரல் நாளிதழ்களில் வெளியிட்டது.
9. அனைத்து எதிர்கால மற்றும் சரியான நேரத்தில் தகவல் தொடர்புகளைப் பெற, உங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் / உங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளருடன் பதிவுசெய்து வைத்திருக்கவும்.

குழு உத்தரவுப்படி
சிகாஜென் இந்தியா லிமிடெட்
அங்கிதா சர்மா எஸ்
நிறுவன செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

இடம்: சென்னை
நாள்: 12.11.2022

K SUGAR C AND P IND COR

கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 'இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்', எண்.239, அண்ணாசாலை, சென்னை - 600006

CIN: L15421TN1995PLC033198

Tel: 044 - 28555171 - 176 / Fax: 044 - 28546617 / e-mail: secretarial@kcpsugar.com / www.kcpsugar.com

EXTRACT OF THE STANDALONE AND CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER / HALF YEAR ENDED 30.09.2022 PURSUANT TO REGULATION 47 OF SEBI (LODR) REGULATIONS, 2015

(ரூபாய் லட்சத்தில்) பங்கு ஒன்றுக்கான விவரங்கள் தவிர

வ. எண்.	விவரங்கள்	தனி தன் நிதிநிலை முடிவு						கூட்டு நிதிநிலை முடிவு					
		முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த அரையாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த அரையாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.09.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.06.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாத)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்ட)	30.09.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.06.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2022 (தணிக்கை செய்யப்படாத)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாத)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்ட)
1.	மொத்த வருமானம்	7388.17	5277.16	7077.45	12665.33	13654.86	28264.48	10320.47	7569.40	8383.68	17889.87	15866.53	33543.52
2.	வரிக்கு, விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு முன் நிகரலாபம் / (நஷ்டம்)	2042.00	(1034.94)	908.26	1007.06	1495.11	(259.92)	3018.72	(292.06)	1114.94	2726.66	1811.79	515.37
3.	வரிக்கு முன் ஆனால் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் நிகரலாபம் / (நஷ்டம்)	2042.00	(1034.94)	908.26	1007.06	1495.11	(259.92)	3018.72	(292.06)	1114.94	2726.66	1811.79	515.37
4.	வரி மற்றும் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் உள்ள நிகரலாபம் / (நஷ்டம்)	1875.30	(1094.89)	660.69	780.41	1385.88	(174.09)	2638.40	(566.97)	820.24	2071.43	1635.63	357.74
5.	நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் மூலம் லாபம் / (நஷ்டம்)	255.93	424.28	36.10	680.21	84.86	–	255.93	424.28	36.10	680.21	84.86	–
6.	மற்ற விரிவான வருமானம்	–	–	–	–	–	(18.43)	74.90	(17.58)	10.36	57.32	78.32	(46.11)
7.	மொத்த விரிவான வருமானம் [உள்ளடங்கியது காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம்]	2131.23	(670.61)	696.79	1460.62	1470.74	(192.52)	2969.23	(160.27)	866.70	2808.96	1798.81	311.63
8.	மொத்த பங்குத் தொகை (ஒரு பங்கிற்கு முக மதிப்பு ரூ.1)	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85	1133.85
9.	ஒரு பங்கின் ஈட்டுத் தொகை												
	- அடிப்படை & நீர்த்த - தொடரும் செயல்பாடுகள்	1.65	(0.97)	0.58	0.69	1.22	(0.17)	2.39	(0.52)	0.73	1.88	1.51	0.27
	- அடிப்படை & நீர்த்த - நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்	0.23	0.37	0.03	0.60	0.07	–	0.23	0.37	0.03	0.60	0.07	–
	- அடிப்படை & நீர்த்த - தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்	1.88	(0.60)	0.61	1.29	1.29	(0.17)	2.62	(0.15)	0.76	2.48	1.58	0.27

குறிப்புகள்:

1. சர்க்கரைத் தொழில் ஒரு பருவகால தொழில் மற்றும் முக்கியமாக சுழற்சியின் தன்மை கொண்டதாக இருப்பதால், மேற்கூறிய முடிவுகளை நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருடாந்திர செயல்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் லாப குறிகாட்டியாகவோ அல்லது காலாண்டுக்கு இடையிலான ஒப்பீடாகவோ கருதமுடியாது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், இந்திய நிறுவனச் சட்டம், 2013, பிரிவு 133-ல் பரிந்துரைக்கப்பட்ட Companies (Indian Accounting Standards) Rules, 2015-ன் படியும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் வழக்கம் மற்றும் கொள்கைகள் படியும் கணக்கிடப்பட்டது.
3. மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு 11.11.2022 அன்று நடந்த இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.
4. தணிக்கையாளர் மூலம் மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் வரையறுக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்டு, அவர்களது அறிக்கை 11.11.2022 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
5. இந்த நாளிதழ் வெளியீடு, SEBI (LODR) Regulations, 2015, விதி 33-ன் படி பங்குச் சந்தைகளுக்கு அனுப்பியுள்ள தகவலின் சுருக்கமே ஆகும். இதன் விரிவான காலாண்டு / அரையாண்டு தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகளை பங்கு சந்தைகளின் (NSE / BSE) வலைதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் வலைதளமான www.kcpsugar.com ஆகிய வலைதளங்களில் காணலாம்.

கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்காக
Sd/-
இர்ம்கார்ட் வெலகாபுடி
நிர்வாக இயக்குநர்

இயக்குநர் குழுவின் ஆணைப்படி

இடம்: சென்னை
தேதி: 11.11.2022